# மட்பாண்டக்கலையும் மட்பாண்டக் கலைஞர்களும்

**ஆய்வாளர்**

வே.அருண்மொழி

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

ஈரோடு - 12

arunmozhiv99@gmail.com

**நெறியாளர்**

முனைவர் கி.பே.மோகனாம்பிகா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

ஈரோடு - 12

**ஆய்வுச் சுருக்கம்**

மண்பாண்டக் கலை எவ்வாறு உருவானது என்றும் மக்கள் எந்த தேவைகளுக்கெல்லாம் மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள் என்றும் இவ்வாய்வு கட்டுரை விளக்குகிறது. மேலும், மண்பாண்டங்களின் வகைகள், கலங்களின் பெயர்கள், கருவிகள், குயவர்களின் வாழ்க்கை நிலை, மண்பாண்டங்கள் செய்யும் முறை, மட்பாண்டங்களின் பயன்பாட்டு முறைகள், ஆகியன பற்றி சங்க இலக்கியப் பாடல்களின் வழி சான்று காட்டப்பட்டு இந்த ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்**

வனைதல் - மண் கலங்கள் - மட்பாண்டங்கள் - முதுமக்கள் தாழி - குழிசி - தசும்பு - கடம் - திரிகை - உறி - சூளை.

**முன்னுரை**

இயல்பாகவே தோன்றி இயற்கையுடன் இணைந்து உணர்ச்சியின் உறைவிடமாக இருந்து, நாட்டுப்புறங்களில் வாழும் மக்களை களிப்படையச் செய்யும் கலைகளே நாட்டுப்புறக் கலைகள் ஆகும். அதில் வரும் கைவினைக் கலைகளில் ஒன்றான மண்பாண்டக்கலைப் பற்றி விரிவாக காண்போம்.

**மண்பாண்டங்களின் கண்டுபிடிப்பு**

மனிதனின் கண்டுபிடிப்புகளில் மிகப் பழமை வாய்ந்த தொழிலாக மட்பாண்டம் வனைதல் கருதப்படுகிறது. புதிய கற்காலத்தில் உணவிற்காக மனிதன் அலையும் நிலை மாறி, வேளாண்மை மூலம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து அதனைப் பாதுகாக்க முற்படுகிறான். எதிர்காலத்தில் பயன்படுத்த தேவை என்பதை உணர்கிறான். அவ்வாறு சேமிக்க எண்ணும் போது மட்பாண்டங்கள் உருவாக்கப்படுகிறது. முதலில் மட்பாண்டங்கள் கையாலும், பிறகு சக்கரத்தின் உதவியாலும் செய்யப்பட்டது.

தமிழகத்தில் மிகப் பழமையான புதிய கற்காலத்தைச் சேர்ந்த மண்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தப் பண்டங்களின் மேற்பரப்பு வழவழப்பாகவும் சாம்பல் நிறத்திலும் காணப்படுகிறது. வட ஆற்காடு என்னும் மாவட்டத்தில் பையம்பள்ளி என்ற இடத்தில் பழங்காலத்தைச் சேர்ந்த இந்த வகையான மண்பாண்ட படிவுகள் கிடைத்துள்ளது.

இந்த வகையான ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்ட மண் அடுக்குகளை ஆராய்ந்து பார்க்கையில் தோராயமாக கி.மு. 1400 - ஆம் ஆண்டைச் சார்ந்தது என்று கணிக்கப்பட்டுள்ளது. இவைகள் மைசூர் மாநிலம் பிரம்மகிரி,

தக்கலக்கோட்டை, ஆந்திர மாநிலம் நாகார்ச்சுனகொண்டர் போன்ற இடங்களில் கிடைத்த சாம்பல் நிற ஓடுகள் இவற்றை ஒத்துக் காணப்படுகிறது. இது சக்கரத்தால் செய்யப்பட்டதாகும். கைகளால் வனையப்பட்ட கரடு முரடான ஓடுகளும் கிடைத்துள்ளது. பண்டையக் காலங்களில் பெரும்பான்மையான மக்கள் இந்த மண்பாண்டங்களையே பயன்படுத்தி வந்தனர். சமைத்தல், இதர பயன்பாடு, இறந்த மக்களை அடக்கம் செய்தல் போன்றவைகள்.

புதிய கற்கால கட்டத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மண்பாண்டங்களில் ஆயுளை அறுதியிட்டுக் கூற வழிமுறைகள் இல்லை. சரியாகச் சுடப்படாமலும் தரமில்லாத காரணத்தாலும் மண்பாண்டங்களின் ஆயுளைக் கூற முடியாது.

**<u>மட்பாண்டக்கலை</u>**

மட்கலங்கள் செய்யும் தொழில் என்பது புதிய கற்கால மக்கள் வாழ்ந்த காலத்தில்தான் முதன் முதலில் தொடங்கியது எனலாம். அவர்களுக்கு சாம்பல் நிறத்தில் இருந்த கலங்கள் மட்டுமே செய்யத் தெரிந்திருந்தது. மண்பாண்டங்கள் செய்யும் தொடக்க காலகட்டம் என்பதால் பொருட்கள் அவ்வளவு நேர்த்தியாக செய்யப்படவில்லை.

முதுமக்கள் தாழிகளும் மட்பாண்டத் துண்டுகளும் பண்டைய காலங்களில் வாழ்ந்த மக்களின் கைவினைக் கலையின் சிறப்பு பற்றி கூறுகிறது. பற்பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் மண்பாண்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. அது காண்பவர்களின் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகவும் அன்றாடத் தேவைகளையும் நிறைவு செய்கிறது. இதனைக் குலத் தொழிலாக குயவர்கள் செய்து வருகின்றனர்.

இரும்பு கால மக்கள் தங்களுக்கு தேவையான கலங்களைத் தானே செய்துள்ளனர். அவற்றுள்,

1. கறுப்பு சிவப்பு மட்கலங்கள்
2. பழுப்புச் சாயம் பூசப்பட்ட மட்கலங்கள்
3. கறுப்பு மட்கலங்கள்
4. சிவப்பு மட்கலங்கள்

இவை அகழாய்வின் போது ஈமச்சின்னங்களிலும், ஊர் இருக்கைகளிலும் கிடைத்துள்ளன. இவைகள் சக்கரத்தால் செய்யப்பட்டவை ஆகும்.

**<u>குயவர்கள்</u>**

மண்பாண்டம் செய்யும் தொழிலைச் செய்பவர்கள் குயவர்கள் என்று அழைக்கிறோம். மேலும், குசவர், வேட்கோவர், கலம் கொட்டி, கடம்பர் , குலாளர், குளப்பன், கும்பரர், உடையார், உதயர், உடையான், மண் உடையான் போன்ற பல பெயர்களும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு பல பெயர்கள் இருப்பினும் " **குயவர்** " என்ற பெயரே மதிப்பு வாய்ந்ததாக இவர்கள் கருதுகிறார்கள். குசவர் என்ற சொல்லே நாளடைவில் குயவர் என்று மருவி நின்றது.

**" மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடிப்**
**பழிக்கல் ஆர்கைப் பாரமுது குயவன் "**

**( நற். 293 : 1-2 )**

என்ற பாடல் வரிகள் குயவர்கள் பற்றி குறிப்பிடுகிறது.

வடக்கத்திய குயவர்கள் மண் சக்கரத்தையும் தெற்கத்திய குயவர்கள் மரச்சக்கரத்தையும் தங்களின் திரிகையாக பயன்படுத்தியுள்ளனர்.

மண்கலம் வனையும் குயவர் குலச் சிறுவர்கள் பற்றியும், அவர்கள் பிசைந்து வைத்த பசுமண் விரும்பிய கலமாக மாறுகிறது எனவும்,

**" வேட்கோ சிறாஅர் தேர்க்கால் வைத்த**
**பசுமண் குரூஉத்திரள் போல அவன் "**

**( புறம் 32: 9-10 )**

என்ற பாடல் விளக்குகிறது.

**ஆனால் இன்னும் பல பகுதிகளில் குயவர்கள் தங்களை "உடையார்" என்றே கூறிக்கொள்கிறார்கள் . வகுப்புச் சான்றிதழ் வரை "உடையார்" என்ற பெயரே வழங்கப்படுகிறது**. கள ஆய்வு சென்ற போது அவர்கள் தங்களை இவ்வாறே அழைத்து அடையாளம் காட்டிக் கொண்டனர்.

**மட்பாண்டப் பொருட்கள்**

மண்ணின் மகத்துவத்தை உணர்த்துவது மண்பாண்டங்கள். மட்பாண்டங்கள் என்னும் சொல் மண்ணால் செய்யப்படும் பொருள்களைக் குறிக்கும். பழங்காலங்களில் இருந்தே மட்பாண்டங்கள் செய்யும் கலையையும் நுட்பத்தையும் மக்கள் அறிந்திருந்தனர். பொதுவாகச் சக்கரத்தைப் பயன்படுத்தி பொருட்களைச் செய்து வந்தனர். மண்பாண்டங்கள் செய்யும் தொழில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறுகிறது. இது குயத்தொழில் என்றும் மட்பாண்டம் செய்பவர்கள் குயவர்கள் என்றும் அழைக்கப்படுகின்றது.

முன்பு வாழ்ந்த அதாவது பண்டையக்கால மக்களில் பெரும்பான்மையோர் மண்பாண்டங்களையே பயன்படுத்தினர். பச்சைக் களிமண்ணால் பொருட்களைச் செய்து உலர வைத்து பின்பு சூளையில் வைத்து சுட்ட பின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். மண்பாண்ட பொருட்களை மக்கள் பல வகையில் பயன்படுத்தினர். உதாரணமாகச் சமைக்க, நீரைச் சேமிக்க, உணவுப் பொருட்களைப் பாதுகாத்து வைக்க, இறந்த உடலை அடக்கம் செய்யும் தாழி என மண்பாண்ட பொருட்கள் பல வகையில் பயன்படுத்தப்பட்டது.

**பானைகள்**

மண்பாண்டங்கள் என்றாலே பானைகள் தான் முதலில் நினைவுக்கு வரும். பானைகள் குழிசி , உறி, தசும்பு, மண்டை, கரகம் என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. விவசாயத்தின் மூலம் வரும் தானியங்களை தன்மைக்கு ஏற்றாற் வகையில் சேமித்து வைக்க மண்பானைகள் பயன்படுத்தப்பட்டன. அவைகள் குதிர்ப்பானை, குலுக்கைப் பானை, அடுக்குப் பானை என பல வகைகளில் பானை உண்டு.

* **குதிர்ப் பானை** - இது சுமார் 1 முதல் 3 மீட்டர் வரை உயரம் கொண்டது. தானியங்களை எடுக்கும் வகையிலும் போடும் வகையிலும் மேல் பகுதியில் ஒரு குறுகலான வாய்ப் போன்ற பகுதி காணப்படும். இதன் வாய்ப்பகுதி இறுக்கமாக மூடப்பட்டு காணப்படும்.

* **குலுக்கைப் பானை** - இது 200 கிலோ கிராம் வரை தானியங்களைச் சேமிக்க பயன்படுத்தப்படும் பானை ஆகும். இந்த குலுக்கைப் பானை களிமண், தாவர நார், உமி போன்ற பொருட்களைக் கொண்டு செய்யப்படும். சிறிய அடிப்பகுதியும் அகலமான மேற்பகுதியும் கொண்டது. இதன் வாய்ப்பகுதி குறுகிய அளவில் இருக்கும். இந்தப் பானைகள் சூரிய ஒளி படாத இருட்டான அறைகளிலும் அதன் அடிப்பகுதி மண்ணில் புதையுமாறும் வைக்கப்படும். புதைக்கப்படும் பகுதிக்கு மேல் தானியங்களை தேவைப்படும் போது வெளியே எடுப்பதற்கு இதன் வாய்ப் பகுதி தேங்காய் தொட்டியைக் கொண்டு அடைக்கப்பட்டு இருக்கும். தானியங்களை கெடாமல் வைக்க அதன் திறப்பு களிமண் கொண்டு அடைக்கப்படும்.

**" திண்கால் உறியன் , பானையன் , அதளன் "**

**( அகம் 274 : 6 )**

மேற்கூறிய வரி பானைகள் மற்றும் உறி பற்றி விளக்குகிறது. ஆகவே, சங்க கால மக்கள் பானை போன்ற பொருட்களைப் பயன்படுத்தியது இப்பாடல் வழி இங்கு புலனாகிறது.

* **அடுக்கப் பானை** - மூன்று பானைகள் ஒன்றன் மீது ஒன்றாக சரியாக அமையும் படி அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும். இந்தப் பானையின் மேற்பகுதி, சிறிய பானையாக இருக்கும். கீழிருந்து மேலாக முதலில் பெரிய பானை அதற்கு மேல் இரண்டாவதாக ஒரு சிறிய பானை , அதன் மேல் மூன்றாவது பானை இரண்டாவது பானையை காட்டிலும் சிறியதாக இருக்கும். இந்தப் பானையின் மேல் பகுதி ஒரு கெட்டியான துணி கொண்டு கட்டப்படும். பானைகளுக்கு இடையே இடைவெளி இருந்தால் களிமண் கொண்டு அந்த இடைவெளியினை அடைத்து விடுவர். பானை மூடப்பட்டு இருப்பதால் சீரான சூழ்நிலை நிலவும். இதனால் தானியங்கள் நீண்ட

நாட்கள் கெடாமல் இருக்கும். இவ்வாறு பானைகள் பல உண்டு என்பதை ஈரோடு மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்கு களப்பணி சென்ற போது இத்தகவல்கள் பானைகளின் வகைகளுக்குச் சான்றாகக் கிடைக்கப்பெற்றது.

* **குழிசி** - பானையின் வேறு பெயராக குழிசி என்ற சொல் வழங்கப்படுகிறது.

**" முரவுவாய் குழிசி முரியடுப் பேற்றி "**

**( பெரும் - 98 )**

இந்த குழிசி என்ற சொல் உணவு சமைக்கும் பாத்திரத்தைக் குறிக்கும்.

* **தசும்பு** - குடம் தான் தசும்பு என்று அழைக்கப்படுகிறது.

**" தயிர்கொடு வந்த தசும்பு நிறைய "**

**( புறம் 33 : 3 )**

இது குடத்தில் தயிர் கொண்டு வருவதைக் குறிப்பிடுகிறது.

* **கடம்** - கடம் என்றால் குடம் என்று பொருள். கடம்பர் என்பது களிமண் சார்ந்த பொருட்களை செய்யும் கைவினைக் கலைஞர் என பொருள் படும்.

**" துடியன் பாணன் பறையன் கடம்பனென்**
**இந்நான் கல்லது குடியு மிலவே "**

**( புறநானூறு - 335 : 7-8 )**

இப்பாடல் கடம்பர் அதாவது குடம் செய்யும் குயவர் பற்றிக் கூறுகிறது.

இவைகள் மட்டும் இன்றி மேலும் பல பொருட்களும் மண்ணால் செய்யப்படுகிறது. கிராமங்களில் காணப்படும் அய்யனார் போன்ற தெய்வங்களும், குதிரைகள், முனியாண்டி, மஞ்சமலை ஆண்டி, சிங்கம் பிடாரி, தேனூர் முத்தையா, கோச்சடை முத்தையா போன்ற தெய்வங்களின் சிலைகளும் குயவர்களின் கைவண்ணத்தால் செய்யப்பட்டவை ஆகும். மேலும், தட்டுகள், தாங்கி, குடுவைகள், கிண்ணங்கள், பிரிமனைகள், கோப்பை, சிகரெட் சாம்பல் கிண்ணம், புகைப்பான், மணிகள், விளக்கு போன்ற எண்ணற்ற பொருட்களும் மண்ணால் செய்யப்பட்டு சூளையில் இட்டு சுடப்பட்டு பின்னர் மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

* **முதுமக்கள் தாழி**

முதுமக்கள் தாழி என்பது இறந்தவர்களை அடக்கம் செய்வதை கூறுகிறது. பெரிய பானைகளில் இறந்தவர்களை உள் அமர வைத்து அடக்கம் செய்யும் முறை ஆகும். தாழியில் இட்டு அடக்கம் செய்யும் முறையைப் பல சங்க இலக்கிய பாடல்கள் விளக்குகிறது

**" சுடுவோர் இடுவோர், தொல்குழிப் படுப்போர்**
**தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்**
**இரவும் பகலும் இழிவுடன் தரியாது "**

**(மணி காதை - 6 : 66 - 68)**

என்ற செய்யுள் வரிகள் பிணங்களை சுடுவது பற்றியும் குழி தோண்டி புதைக்கப்படுவது பற்றியும், தாழ்ந்த இடத்தில் வைத்து வாயில் அடைப்பது பற்றியும், தாழியில் கவிழ்ப்பது பற்றியும் கூறுகிறது. மேலும், மற்றுமொரு செய்யுள்,

**" கவிசெந் தாழி குவிபுறத்து இருந்த**
**செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா**
**வாய்வன் காக்கையும் கூகையும் கூடிப்**

**(புறம் 238 : 1-3)**

என்ற வரிகள் பிணங்களை தாழியில் உள் வைத்து புதைக்கும் வழக்கத்தை விளக்குகிறது. இதனால் மக்கள் தாழிகளைப் பயன்படுத்தினர் என்பது தெளிவாகின்றது.

களஆய்வில் நான் கண்ட தாழி மேற்பகுதி அகலமாகவும் கீழ்பகுதியில் குறுகிய அளவிலும் காணப்பட்டது. வாய் பகுதி பெரியதாக இருக்கும். அதன் வழியே இறந்தவர்களின் உடலை உள் அமர வைத்து அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் போன்றவற்றை உள் வைப்பர். மேலும், இறந்தவர் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு தேவையான பொருட்களையும் உள் வைப்பர். அதனை அவர் பயன்படுத்துவார் என எண்ணுகின்றனர். இது அவர்களின் நம்பிக்கை ஆகும்.

**மண்பாண்டம் செய்ய பயன்படுத்தப்படும் கருவிகள்**

மண் மூலப் பொருள் ஆகும். பிறகு சக்கரம் , தட்டும் பலகை, கம்பி, ஊசிக்கருவி போன்றவைகள் மண்பாண்டம் செய்ய முக்கியக் கருவிகளாக அமைகிறது. இணைத்தல், அலங்காரம் செய்யும் கருவிகள், கையால் கட்டும் கருவிகள், வடிவமைத்தல் கருவிகள், முடித்தல் கருவிகள் என ஏராளமான கருவிகள் உண்டு. மண்பாண்டம் செய்யும் சக்கரம் பற்றிய செய்தியை ,

**" அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய "**

**( புறம் - 256 : 2 )**

என்ற செய்யுள் வரி குறிப்பிடுகிறது.

**மட்பாண்டம் செய்யும் முறை**

மட்பாண்டங்கள் செய்யும் போது முதலில் நல்ல களி மண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கல், தூசி போன்றவைகள் இல்லாதவாறு சுத்தப்படுத்தி பிறகு பதப்படுத்துவது போல, தண்ணீர் கலந்து ஒன்றிணைந்து பெரிய உருண்டையாக உருட்டி வைப்பர்.

சிறிது நேரம் கழித்து ஐந்தாறு முறை காலால் நன்கு மண் ஒன்று சேரும் வரை மிதிக்க வேண்டும். மண் நிலத்தில் ஒட்டாமல் இருக்க அடியில் மணல் தூதுவர். மிதித்து ஒன்று சேர்த்து பின்னர் கைகளால் பிசைந்து மீண்டும் ஒன்று சேர்த்து வைப்பர். அது சில மணி நேரம் ஊற வேண்டும். ஊறிய பின்னர் சக்கரத்தில் இட்டு சக்கரத்தைச் சுழல விடுவர். அவ்வாறு சக்கரம் சுழலும் போது குயவர் தேவையான பொருட்களைச் செய்வர். வடிவம் கொடுப்பர். அலங்காரம் செய்வர். அவ்வாறு செய்யப்பட்ட பானை, சட்டி, குடம் போன்ற எந்த மட்பாண்ட பொருளாயினும் செய்யப்பட்ட பின்பு உலர்த்தப்படும். பிறகு சூளையில் அடுக்கி சுடப்படும். மேலும் பானைகள் சூளையில் இட்டு சுடப்படுவதை , சங்க இலக்கியப் பாடல்களும் மெய்ப்பிக்கிறது. அவை,

**"கலம்செய் கோவே கலம்செய் கோவே**
**இருள்திணிந் தன்ன குருஉத்திரள் பரூஉப்புகை**
**அகல்இரு விசும்பின் ஊன்றுஞ் சூளை**
**நனந்தலை மூதூர்க் கலம்செய் கோவே "**

**(புறம் - 228 : 1 - 4 )**

என்ற செய்யுள் வரிகள் விளக்குகிறது.

இது போன்ற தகவல்கள் பல நான் கள ஆய்வு சென்ற போது திரட்டினேன். தற்போது மின் இயந்திரமும் அரசால் வழங்கப்படுகிறது. அது மண்பாண்டங்கள் செய்வதற்கு பயன்படும் வகையில் உள்ளது. இருப்பினும், மரச்சக்கரத்தின் வசதி அந்த மின் இயந்திரத்தில் இல்லை என மண்பாண்டம் செய்பவர்கள் கூறுகிறார்கள். தங்களுக்கு மரச்சக்கரமே ஏதுவாக உள்ளது என மண்பாண்ட கலைஞர்கள் தகவல் தெரிவிக்கிறார்கள்.

**முடிவுரை**

மட்கலங்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது, மட்கலங்கள் உற்பத்தி செய்ய தேவைப்படும் மூல ஆதார பொருட்கள், பயன்படும் கருவிகள் போன்றவை இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் வகைகள் அதன் பெயர்கள் ஆகியனவும் மட்கலங்களை உற்பத்தி செய்யும் கைவினைக் கலைஞர்களான குயவர்கள் குறித்தும் அவர்களின் வேறு பல பெயர்கள் குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகிறது.

**துணைநூற் பட்டியல்**

**1. முதன்மைச் சான்று - கள ஆய்வு**

**துணைநூல்கள்**

**1**. ஞானம் - நாட்டுப்புற இயல் தோற்றமும் வளர்ச்சியும்
சாரதா பதிப்பகம், சென்னை - 14.
முதற் பதிப்பு : 2017.

2. ராமன் கே.வி - தொல்லியல் ஆய்வுகள் (அகழாய்வு, கல்வெட்டு, நாணயம் பற்றியவை )
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி. சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098,
முதற்பதிப்பு : ஜூலை, 2015.

3. சுப்பிரமணியன்.தி - தொல்பழங்காலம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி. சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை- 600 098,
முதற்பதிப்பு - ஜூலை 2016.

4. கந்தையா ந. சி - தென்னிந்திய குடிகளும் குலங்களும்
உதயம் அச்சகம், சென்னை.
முதல் பதிப்பு அக்டோபர் 1999.

5. சண்முகசுந்தரம். சு - நாட்டுப்புறவியல்
காவ்யா வெளியீடு,16,இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024.
முதல் பதிப்பு - சனவரி 1975
ஐந்தாம் பதிப்பு - 2013

**6. தகவலாளர்கள்**

1. பழனிச்சாமி - கோட்டைக்காடு ( திருப்பூர் மாவட்டம்) – 88709 81747.
2. நிர்மலாதேவி - தமிழ்த்துறை தலைவர் ( பணி ஓய்வு )
வேளாளர் மகளிர் கல்லூரி ( தன்னாட்சி )
ஈரோடு - 12.
99943 67069.